1981 மே 13] [திரு. செ. அரங்கநாயகம்]

அந்த அளவிற்கு ஆசிரியர்கள் ஒத்துழைப்பு தருகின்ற காரணத்தினாலேயும் இப்பொழுது அப்படிப்பட்ட நிலைமைகளை நாங்கள் உருவாக்க மாட்டோம் என்று அவர்கள் சொல்லி வருகின்ற காரணத்தினாலேயும், ஆகவே இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் இந்தச் சட்டமுன்வடிவை நிறைவேற்ற வேண்டியதில்லை என்று அரசு கருதுகிறது.

பிறகு அப்படிப்பட்ட நிலைமைகளை அவர்கள் உருவாக்குவார்களேயானால் நிச்சயமாக அரசு சட்டம் கொண்டு வரத்தான் செய்யும்காரணம் நாம் ஆசிரியர்களுடைய உரிமைகளையும் பாதிக்கக் கருதவில்லைஆனால் அதேநேரத்தில் மாணவர்களுடைய கல்வியை நாம் மிக முக்கியமாகக் கருதுகிறோம். அது ஒரு சமூகநலனாக இருக்கின்ற காரணத்தினாலே ஆசிரியர்கள் ஒத்துழைப்பு இருக்கும் என்று கருதி நாம் இன்றையதினம் அந்தச் சட்டமுன்வடிவைத் திரும்பப் பெறுவது என்ற முடிவை மேற்கொண்டிருக்கிறோம். ஆகவே இந்தத் திரும்ப பெறுவதற்கான அனுமதியை நான் கோருகின்றேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவரவர்களே, இச் சட்ட முன்வடிவைத் திரும்பப் பெறுகிறேன்,

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: இச் சட்ட முன்வடிவு திரும்பப் பெறப்பெற்றிருக்கிறது.

4. அரசினர் தீர்மானங்கள் (தொடர்ச்சி)

(இ) பேரவையின் அலுவல்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

''இன்றைய நிகழ்ச்சி நிரலில்—

இனம் 4, அரசினர் சட்டமுன்வடிவுகள் ஆய்வு செய்தல் என்ற தலைப்பில் குறிப்பிட்டுள்ள சட்டமுன்வடிவுகளில், இரண்டாவதாகக் குறிப்பிடப்பெற்றுள்ள சட்டமுன்வடிவை நாளை, 14—5—1981 அன்று முதலாவதாக எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும். முதல், மற்றும் மூன்று, நான்கு ஆகிய சட்டமுன்வடிவுகளை, இன்று மாலை 4 மணிக்குக் கூடி பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்றது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று மாலை 4 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-22 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

பிற்பகல் 4.00 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

7. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி.

உ. தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்டமுன்வடிவு 1981 (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 43/1981).

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,

> "1981-ஆம் ஆண்டு தொழில் தகராறுகள் (தமிழ்நாடு திருத்த) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 43/1981) ஆய்வுக்கு * எடுத்துக் கொள்ளப் பெறவேண்டும்"

என்று மொழிகிறேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நீண்ட நாளாக தமிழகத்தில் இருக்கக்கூடிய தொழிலாளிவர்க்கம் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தை நிறைவேற்ற வேண்டுமென்று வெளியிலும் இந்த அவைக்கு உள்ளேயும் பல தடவை கோரிக்கைகள் வைத்தது அனைவருக்கும் தெரிந்தது. இன்று கொண்டு வந்திருக்கக்கூடிய சட்டம்கூட தமிழகத்திலே இருக்கக்கூடிய தொழிலாளி வர்க்கம் எந்த முறையிலே இந்தச் சட்டத்தை உருவாக்க வேண்டுமென்று விரும்பினார்களோ அந்த முறையிலே முழுக்க முழுக்க அமையவில்லையென்று இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். ஆனாலும் இந்தச் சட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். வரவேற்கிற நேரத்திலே இந்தச் சட்டம் சம்பந்தமாக நாங்கள் சில திருத்தங்கள் கொடுத்திருக்கிறோம். அதன்மீதும் இந்தச் சட்டம் சம்பந்தமாகவும் சில கருத்துக்களைச் சொல்லவேண்டுமென்று விரும்புகிறோம். தமிழகத்திலே இன்று நடைமுறையிலே ஏற்பட்டிருக்கக்கூடிய சில உண்மையான பிரச்னைகளையும் சேர்த்துக்கொண்டு இந்தச் சட்டத்தை நாம் பார்க்க வேண்டுமென்று சொல்லவிரும்புகிறேன்.

---

* 1981ம் ஆண்டு மே மாதம் 5ம்தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.